திருப்பூர்-பழனி இருப்புப்பாதை

* 198 வினா—திருமதி வி.ப. பழனியம்மாள் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரலிருந்து தாராபுரம் வழியாக பழனி செல்லுவதற்கு இருப்புப் பாதை அமைக்க, மத்திய அரசுக்கு நமது மாநில அரசு சிபாரிசு செய்யும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அவ்விதத் திட்டம் எதுவும் மாநில அரசின் பரிசீலனையில் இல்லை.

திருமதி வி. ப. பழனியம்மாள் : தலைவர் அவர்களே, அநேக ஆண்டுகளாக தாராபுரம் வட்டத்து மக்கள் எங்களுடைய பகுதிக்கு ரயில் பாதை வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இனியாவது அரசாங்கம் அது குறித்து நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது போன்ற கோரிக்கை வந்தால் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

சாத்தியாறு அணைக்கட்டு.

* 199 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) மதுரை மாவட்டம், நிலக்கோட்டை தாலுகாவிலுள்ள சாத்தியாறு அணைக்கட்டு திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்கிற வேண்டுகோள் எதனும் அரசாங்கத்துக்கு வந்ததா?

(இ) ஆம் எனில், அதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (அ) ஆம்.

(இ) இந்த வேண்டுகோள் ஆய்ந்ததில் சாத்தியாறு ஓடை நீர்த் தேக்கத்தின் ஆயக்கட்டை விரிவுபடுத்துவது இயலாதென்று கண்டறியப் பட்டது.

கதர் கிராமத் தொழில் வாரியம்

* 200 வினா—திரு. பி. வேலுசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாடு அரசாங்கத்தின்கீழ் இயங்கும் கதர் போர்டில் எல்லா அரசியல் கட்சிக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்க சர்க்கார் உத்தேசித்துள்ளதா ?

(இ) தற்போதைய கதர் போர்டில் எந்தெந்த அரசியல் கட்சியினர் அங்கம் வகிக்கின்றனர் ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) இல்லை.

(இ) தமிழக அரசின் கீழ் இயங்கும் கதர்-கிராமத் தொழில் வாரியத்தில், அரசியல்கட்சி அடிப்படையில் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படுவதில்லை. மாறாக, கதர் உற்பத்தியிலும், வளர்ச்சியிலும், அல்லது கிராமத் தொழில் வளர்ச்சியில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட அரசாங்கச் சார்பற்றவர்களும் அரசாங்க அதிகாரிகளும் மேற்படி வாரியத்தில் பணியாற்றும் வண்ணம் உறுப்பினர்களாக அரசாங்கத்தால் நியமிக்கப்படுகின்றனர்.

திரு. கொ. இரா. ஞானசம்மந்தன் : அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர் வர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் கொடுக்கப்படுகிறதா அல்லது அதிலே அனுபவமும் அக்கறையும் கொண்டவர்கள் என்ற அடிப்படையிலே பிரதிநிதித்துவம் கொடுக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அதற்கான விளக்கந்தான் தரப் பட்டது. அரசியல் கட்சி அடிப்படையில் நியமிக்கப்படுவதில்லை. கதர்த் துறையில் ஈடுபாடு கொண்டவர்கள், கதர்த் துறையை வளர்க்க வேண்டு

மென்று ஆர்வம் கொண்டவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். கடந்த காலத்தில் அரசியல் கண்ணோட்டத்தோடு பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்ட காரணத்தால் அது நல்ல முறையில் வளர்ச்சியடைய முடியவில்லை. ஆகவே, அதிலே ஈடுபாடு கொண்டவர்கள்தான் தற்போது நியமிக்கப் படுகிறார்கள்.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி : பழைய சர்க்கார் எந்த முறையில் அந்த போர்டை அமைத்தது என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : பழைய சர்க்கார் இந்த முறையில்தான் அமைக்க வேண்டுமென்ற விதிமுறைகளை வைத்திருந் தார்கள். ஆனால் முழுக்க முழுக்க ஒரு கட்சியைச் சார்ந்தவர்களே இடம் பெற்றிருந்தார்கள் என்று தெரிய வருகிறது. அப்படியானால் அவர்களு டைய நோக்கம் என்ன என்பதைப் பற்றி அவர்களே ஆராய்ந்து தெரிந்து கொள்ளலாம்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : காதி இலாகாவில் கடந்த காலத்தில் ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களே நியமிக்கப்பட்டார்கள் என்ற காரணத்தால், கதர்த் துறையில் அபிவிருத்தி ஏற்படாத நிலைமை ஏற் பட்டது என்பதையும், அதைப் போக்கும் முகத்தான் அந்தத் துறையிலே அக்கறையுடைய பல கட்சிச் சார்புடையவர்களையும், அதனுடைய வளர்ச்சியை ஊக்குவிக்கின்ற முறையில் சட்டமன்ற உறுப்பினர்களையும் இடம் பெறச் செய்ய வழி வகுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : ஏற்கனவே இதற்கு விளக்கம் தரப்பட்டிருக்கிறது. அரசியல் கட்சிகளின் அடிப்படையில் அங்கம் வகிப்பது என்று பட்டால், பின்னர் கருத்து முரண்பாடு ஏற்படும்போது அது ஒரு போராட்டக் குழுவாக ஆகிவிடும். அதிலே அக்கறை கொண்ட சட்டமன்ற உறுப்பினர்களே அந்தக் குழுவிலே நியமிக்கப்படுகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் திரு பரமசிவம் அவர்களும், திரு. து. ப. அழகமுத்து அவர்களும் காலியான இடங்களில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. சோ. அழகர்சாமி : தற்போது இதிலே அங்கம் வகிப்பவர்கள் யார், யார் ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : திரு. கே. அருணாசலம், காந்தி அரும்பொருள் காட்சி, மதுரை; திரு. பி. என். பரமசிவம், சட்டமன்ற உறுப்பினர்; திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர், சேலம் மாவட்டம்; திரு. எம். அழகிரிசாமி, மதுரை மாவட்டம்; திரு. ஏ. பி. சி. வீரபாகு, தூத்துக்குடி; திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை, தஞ்சாவூர் மாவட்டம்; திரு. து. ப. அழகமுத்து, சட்டமன்ற உறுப்பினர்; திரு. கோ. வெங்கடா சலபதி, தலைவர், காந்தி நிகேதன் ஆசிரமம், மதுரை மாவட்டம், திரு. கே. பி. வி. கிரி, கோவை மாவட்டம், திரு. கே. ராமலிங்கம், இயக்குநர், குன்னத்தூர் கூட்டுறவு வெல்ல விற்பனைச் சங்கம், கோவை மாவட்டம், திரு. வி. எம். சுந்தரராமானுஜ ரெட்டியார், கடலூர், கிராம வளர்ச்சித் துறை இயக்குநர்; திரு குருசாமி நாடார், காந்தி நிகேதன் ஆசிரமம், மதுரை மாவட்டம்.

*201 **வினா—திரு. கரு. சீமைச்சாமி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கதர் போர்டு ஊழியர்கள் சங்கம் அமைத்துக் கொள்வதற்கு அங்கீகாரம் கேட்டு சர்க்காருக்கு விண்ணப்பம் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மேல் சர்க்கார் எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.